




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஏப்ரல். 20, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 195 ❖ ரூ.10


## மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காக சமூக நீதியை மறுப்பது சரியாகாது

# சம நீதி

## கிறிஸ்தவராக மாறிய ஆதி திராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு
## மத்திய அரசை வலியுறுத்தி தமிழக பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

**சென்னை , ஏப். 20-**

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறிஸ்தவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூக நீதியின் பயன்களைப் பெற, அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்டபேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை சட்டப்பேரவையில் நேற்று முன்மொழிந்த முதல்வர் ஸ்டாலின், "மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காக சமூக நீதியை மறுப்பது சரியாகாது. சமூக நீதியானது சம நீதியாக வழங்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.**

தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் ஸ்டாலின் பேசியது:

நமது நாட்டின் அரசியல் சட்டப்படி இந்து, சீக்கியர், பௌத்த மத்தைத் தவிர்த்த பிற மதங்களைச்சேர்ந்தயாரும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்பட முடியாது. வரலாற்று ரீதியாகவே அவர்கள் ஆதி திராவிடர் வகுப்பினராக இருக்கும்போது, அவர்களுக்குப் பட்டியலின வகுப்புக்கான உரிமைகளை வழங்குவதே சரியானதாக இருக்கும். அதன் மூலமாகத்தான் அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்கும்.



அதன் மூலமாக சமூகத்தில் அவர்களுக்கான உயர்வும், மேம்பாடும் கிடைக்கும். மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காகசமூகரீதியாக அவர்களுக்குத் தரப்பட்டு வந்த, அதே சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை இவர்களுக்குத் தர மறுப்பது சரியல்ல என்பதுதான் நமது நிலைப்பாடு.

அரசியலமைப்பு (பட்டியலின சாதிகள்) திருத்த ஆணை 1950-ன்படி, இந்து மதத்தில் இருந்து வேறுபட்ட மதத்தைக் கூறும் எவரும் அட்டவணை சாதிகளின் உறுப்பினராக ஆக முடியாது. ஆனால், 1956 ஆம் ஆண்டு சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்களையும், 1990 ஆம் ஆண்டு பவுத்த மதத்தைப் பின்பற்றுபவர்களையும், பட்டியல் சாதியினராகச் சேர்க்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. இதே போன்ற திருத்தத்தைத்தான் கிறித்தவர்களாக மதம் மாறிய

ஆதி திராவிடர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கோரிக்கையை பல்வேறு தரப்பினரும் அரசுக்கு வைத்திருக்கிறார்கள். ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறும்போது, தானாக ஆதி திராவிடர் வகுப்பில் இருந்து வெளியேறி விடுகிறார்கள் என்றும்; மதம் மாறிய பின்னும் அவர்களுக்கு ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்றிதழ் இருந்தால் அது செல்லாது என்றும்; மதம் மாறியவர்களுக்கு ஆதி திராவிடர் வகுப்பு சான்றிதழ் வழங்கப்பட்டால் அது போலிச் சான்றிதழ் என்றும்; தேசிய ஆதி திராவிடர் ஆணையத் துணைத் தலைவர் கடந்த ஆண்டு சொல்லி இருந்தார்.

அப்போது பல்வேறு தரப்பினரும் இதற்குக் கடுமையாக எதிர்ப்பை தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையிலான ஆணையம்ஒன்றைஒன்றிய அரசு அமைத்துள்ளது. இந்த ஆணையம் இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்து மாநிலங்களின் கருத்தையும் பெற்ற பிறகே இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை வலியுறுத்தும் வகையில், பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம்: "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறிஸ்தவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற, அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

சமூக நீதியானது சம நீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார். இதையடுத்து, தமிழக சட்டப்பேரவையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொதுச்செயலாளராக அறிவிக்கவேண்டும்
## தேர்தல் ஆணையத்துக்கு இபிஎஸ் மீண்டும் மனு

சென்னை , ஏப். 20-

அதிமுக பொதுச் செயலாளர் தேர்வு மற்றும் பொதுக்குழு தீர்மானங்களை உடனடியாக அங்கீகரித்து முடிவை அறிவிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்பு மனு அளித்துள்ளது.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் வேட்பாளர் அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் ஆணையத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்பு மனு அளித்துள்ளது.

அதில், புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் அன்பரசனின் வேட்பு மனுவில் கையெழுத்திடும் வகையில், பொதுச் செயலாளர் தேர்வு மற்றும் பொதுக்குழுக் கூட்ட தீர்மானங்களை உடனடியாக அங்கீகரித்து முடிவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



இதனிடையே, அதிமுக பொதுக்குழு விவகாரம் தொடர்பாக டெல்லி உயர்நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்கள் ராம்குமார் ஆதித்தன், சுரேன் பழனிசாமி ஆகியோர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில், அதிமுக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை அங்கீகரிக்கக் கூடாது என உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் மீது இறுதி தீர்ப்பு வராமல், அதிமுக பொதுக்குழு விவகாரத்தில் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் போலி டாக்டர்கள்
## கைது செய்யப்பட்டு சிறையில் அடைப்பு

கோட்டைப் பட்டினம் ஏப் 20:

முறையாக மருத்துவம் படிக்காமல் புதுக்கோட்டை மாவட்டம் கடற்கரை பகுதியான கோட்டைப் பட்டினத்தில் மருத்துவர் பணி மேற்கொண்டு வந்த ஐம்பது வயதிற்கு மேற்பட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் பகுதியில் போலி மருத்துவர்கள் அதிகமாக இருப்பதாக போலீசருக்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவல் அடிப்படையில் தனிப்படை போலீஸார்கள் கோட்டைப்பட்டினம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த சோதனையில் ஈடுபட்டனர் அப்பொழுது கோட்டைப் பட்டினத்தில் போலி மருத்துவராக தொடர்ந்து செயல்பட்டு வந்த பழனிச்சாமி மகன் சுப்பிரமணியன் (54) மற்றும்அய்யனார்மகன் வீரையா(50) மற்றும் அம்பலவாநேந்தல் பகுதியில் போலியாக மருத்துவம் பார்த்த நாகூரான் மகன் சுந்தரராஜன் (50) ஆகிய மூன்று பேரையும் தனிப்படை போலீசார்கள் கைது செய்தனர்.

கைது செய்த அவர்களை கோட்டைப்பட்டினம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தினர் அப்பொழுது அவர்கள் அந்த பகுதியில் 2 வருடங்களாக பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்து வந்தது தெரிய வந்தது இதனையடுத்து மருத்துவம் படிக்காமல் மருத்துவராக செயல்பட்ட மூன்று போலி மருத்துவர்கள் மீது வழக்கு பதிவு செய்து பின்னர் அறந்தாங்கி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர். கோட்டைப் பட்டினம் பகுதியில் மூன்று போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## எந்த இடையூறும் இல்லாமல்
## மீன் கடைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்

சென்னை , ஏப். 20-

சென்னை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான லூப் சாலையை ஆக்கிரமித்து, அப்பகுதி மீனவர்கள் மீன் கடைகள் அமைத்துள்ளதாகவும், அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி, சென்னை ஐகோர்ட்டு தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, லூப் சாலையின் மேற்கு பகுதி ஆக்கிரமிப்புகளை அகற்றி அறிக்கைதாக்கல் செய்யவும், அங்குள்ள உணவகங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு உள்ளதா? என அறிக்கை தாக்கல் செய்யவும் மாநகராட்சிக்கு உத்தரவிட்டிருந்தது. அதன்படி,லூப்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருவதாகவும், அப்பகுதியில் உள்ள மீனவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் 75 மீன் கடைகள், 15 குடிசைகள், 21 பெட்டிக்கடைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன் சந்தை அமைக்கும் வரை மீனவர்கள் குடியிருப்பில் இருந்து சாலைக்கு இடையில்



உள்ள இடத்தை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும், போக்குவரத்தை முறைப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மனுவாக தாக்கல் செய்ய மாநகராட்சிக்கு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர் மற்றும் பி.பி. பாலாஜி அமர்வு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, சாலையின் மேற்கு பகுதியில் உள்ள நடைபாதையில் தற்காலிகமாக மீன் கடைகள் அமைக்கப்படுவதாகவும், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் ஒழுங்குபடுத்தப்படும் எனவும், கலங்கரை விளக்கத்தின் பின்புறமும், சீனிவாசபுரத்தின் அருகிலும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை நிறுத்த இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறி மாநகராட்சி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இல்லாமல் மீன்கடைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 19-ந்தேதிக்கு தள்ளி வைத்தனர். மேலும் நீதிபதிகள், இந்த வழக்கில் யாருக்கும் தர்மசங்கடம் ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. இந்த பொதுசாலை மாநகராட்சியின் சொத்தல்ல. அது பொதுமக்களின் சொத்து. இதனால் யாரும் சாலையை ஆக்கிரமிப்பதை அனுமதிக்க முடியாது. இந்த விவகாரத்தை அரசியலாக்க கூடாது என்று கருத்து தெரிவித்தனர்.

### போராட்டம் வாபஸ்

உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, நொச்சிக்குப்பம் பகுதியில், திங்கள்கிழமை முதல் நடந்துவந்த போராட்டத்தை மீனவர்கள் வாபஸ் பெற்றுள்ளனர். முன்னதாக, மீன் கடைகளை அகற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நொச்சிக்குப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் மீனவ பெண்கள், சாலையின் நடுவே படகுகளை நிறுத்தி வைத்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், படகுகளில் கறுப்புக் கொடிகளை ஏற்றியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்கள் கூட்டமாக சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக, லூப் சாலையில் தடுப்பை ஏற்படுத்தி கோஷங்களை எழுப்பினர். மீன் கடைகள் அங்கு செயல்பட அனுமதிக்க வலியுறுத்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். லூப் சாலையில் மீன் கடைகள் நடத்தும் வியாபாரிகள் மற்றும் மீனவர்களுக்காக ரூ.9 கோடியே 97 லட்சம் செலவில் புதிதாக மீன் சந்தை அமைக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலான பணிகள் முடிவடைந்து அந்த சந்தை 6 மாதங்களில் திறக்கப்படவுள்ளது என்று உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணையின்போது, சென்னை மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## சூடான் உள்நாட்டு சண்டை
## இந்தியர்கள் 3,000 பேர் சிக்கி தவிப்பு

சூடான், ஏப். 20-

தமிழகம், கேரளா, கர்நாடகம் மாநிலங்களை சேர்ந்தவர்கள் அங்கு சிக்கி தவிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கேரளாவை சேர்ந்த சுமார் 200 பேர் அங்கு சிக்கி இருப்பதாகவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. மீட்புப்பணிகள் குறித்து தூதரக அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தியர்களை குறித்த கூடுதல் தகவல்களை வெளியிட முடியாது எனவும் வெளியுறவு துறை அமைச்சகம் கூறியுள்ளது. தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்தவர்கள் சூடான் நாட்டில் சிக்கியுள்ளனர். அங்கே கடுமையான சண்டை நடைபெற்று கொண்டிருக்கும் நிலையில் யாரும் தங்கள் தங்கி இருக்கும்



இடங்களை விட்டு வெளியே வரவேண்டாம் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவுரை அளித்துள்ளது.

அந்த நாட்டின் தலைநகரில் உள்ள இந்திய தூதரகம் அங்கு சிக்கியுள்ள இந்திய மக்களுக்கு அறிவுரைகளை அளிக்க முயற்சி செய்து வருகிறது. எதற்காகவும் வெளியே செல்ல வேண்டாம் எனவும் உணவு, தண்ணீர் போன்றவற்றிற்கு தட்டுபாடு ஏற்பட்டால் அதை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் இருந்து பெற்று அதன் மூலமாகவே சமாளிக்க வேண்டும் எனவும் வெளியே செல்வது சரியாக இருக்காது எனவும் அறிவுறுத்தபட்டுள்ளது.

அங்கே ராணுவம் மற்றும் துணை ராணுவம் இடையே கடுமையான மோதல் நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த மோதல் இடைக்காலமாக நிறுத்திவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும். இன்னும் அமைதி திரும்பவில்லை ஆகவே அமைதியான சூழல் ஏற்படும் போது மக்கள் அங்கிருந்து வெளியேறலாம் என்றும், அதுவரை தங்கியிருக்கும் இடங்களிலேயே பத்திரமாக இருக்கவேண்டும் என்றும், கேட்டுக்கொண்டுள்ளது.

இதை தவிர மத்திய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெய்சங்கர் சௌதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளை சேர்ந்த அமைச்சர்களை தொடர்பு கொண்டு பேசி இருக்கிறார். அவர்கள் உதவியுடன் இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை செய்து அவர்களை அங்கிருந்து மீட்க நடவடிக்கைகளை எடுக்கலாம் என ஆலோசனை நடைபெற்று வருகிறது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...




# ஹெலிகாப்டரில் பணம் எடுத்து சென்றாரா? அண்ணாமலையிடம் அதிகாரிகள் சோதனை



உடுப்பி , ஏப்.20-

கர்நாடக மாநில பாஜக தேர்தல் இணை பொறுப்பாளரான அண்ணாமலை, ஹெலிகாப்டரில் மூட்டை மூட்டையாக பணம் கொண்டு வந்ததாக, காங்கிரஸ் மூத்த தலைவர் குற்றம்சாட்டியதை தொடர்ந்து, அண்ணாமலையிடம் அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

கர்நாடக சட்டப்பேரவைதேர்தல்மே 10-ம் தேதி நடக்க உள்ளது. இதையொட்டி, அங்கு பிரச்சாரம் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்நிலையில், உடுப்பிக்கு ஹெலிகாப்டரில் சென்ற மாநில பாஜக தேர்தல் இணை பொறுப்பாளர் அண்ணாமலை, மூட்டை மூட்டையாக பணத்தை கொண்டு வந்ததாக முன்னாள் அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான வினய்குமார் சொரகே குற்றம்சாட்டியிருந்தார்.

இதையடுத்து, தேர்தல் ஆணையத்தின் பல்வேறு குழுக்கள் 4 இடங்களில் அண்ணாமலையை வழிமறித்து செவ்வாய்கிழமை சோதனையில் ஈடுபட்டனர். இருப்பினும், இந்தசோதனையில்தேர்தல் விதிமீறல்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என்று உடுப்பி தொகுதி தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: கர்நாடக மாநில பாஜக தேர்தல் இணை பொறுப்பாளர் அண்ணாமலை காலை 9.55 மணிக்கு உடுப்பி வந்தடைந்தார். அப்போது, அவரது உடமைகளை தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படை குழு சோதனை செய்தது. அதில், தேர்தல் நடத்தைவிதிகளை மீறும் வகையிலான எந்த பொருளும் கண்டறியப்படல்லை. பறக்கும் படையின் மற்றொரு குழுவினர், தி ஓஷன் பேர்ல் ஓட்டலுக்கு அண்ணாமலை பயணித்த வாகனத்தை சோதனை செய்தனர். அதில், ஒரு பையில் 2ஜோடி ஆடைகள், ஒரு தண்ணீர் பாட்டில் மட்டுமே இருந்தன.

இதுதவிர, காவுப் பகுதிக்கு சென்ற அண்ணாமலையின் வாகனத்தைஇடைமறித்து சோதனைநடத்தப்பட்டது. மேலும், அண்ணாமலை ஓட்டலுக்குதிரும்பியவுடன் அதிகாரிகள் மீண்டும் அவரிடம் சோதனையில் ஈடுபட்டனர். ஆனால்,இந்த 4இடங்களிலும்நடைபெற்ற சோதனைகளில் விதிமீறல் தொடர்பாகஎந்தசெயலும் நடைபெறவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடக சட்டசபை தேர்தலில் அதிமுக போட்டி புலிகேசி நகர் தொகுதிக்கு வேட்பாளர் அறிவிப்பு



சென்னை , ஏப்.20-

கர்நாடகமாநிலத்தில் மே 10ம் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தேர்தலில் ஆளும் பாஜகவுக்கும், காங்கிரசுக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் அதிமுக போட்டியிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. தங்கள் விருப்பத்தை கூட்டணி கட்சியான பாஜகவிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பாஜக வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியான நிலையில், அதிமுகவுக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்நிலையில், கர்நாடக சட்டசபை தேர்தலில் அதிமுக போட்டியிடுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சிமன்றக் குழு பரிசீலித்து எடுத்த முடிவின்படி கர்நாடக மாநிலம் புலிகேசி நகர் தொகுதியில் அதிமுக வேட்பாளாக அன்பரசன் போட்டியிட உள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்துள்ளார். அன்பரசன் கர்நாடக மாநில அதிமுக அவைத்தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. புலிகேசி நகர் தொகுதியில் தமிழர்கள் அதிகம் வசிக்கின்றனர். அ.தி.மு.க.வுக்கு சீட் ஒதுக்காமல் பாஜக கைவிரித்து விட்டதால், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது. வரும் 20ம் தேதி நடக்கும் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கர்நாடக தேர்தல்மற்றும்கூட்டணி விவகாரம் குறித்து விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.






சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத்துறை மீதான மானிய கோரிக்கை விவாதம் நேற்று நடைபெற்றது இதனையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவிடத்தில் ஸ்ரீபெரும்புதூர் கோபுரத்துடன் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

# எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு இன்றுடன் நிறைவடைகிறது விடைத்தாள் திருத்தும் பணி 25-ந்தேதி தொடக்கம்



சென்னை, ஏப்.20-

எஸ்.எஸ்.எல்.சி. மாணவ-மாணவிகளுக்கான பொதுத்தேர்வு கடந்த 6-ந்தேதி தொடங்கியது. இந்த தேர்வை 9 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் எழுதுகிறார்கள்.

பிளஸ்-2, பிளஸ்-1 மாணவ-மாணவிகளுக்கான பொதுத்தேர்வுமுடிவுபெற்ற நிலையில், அவர்களுக்கான விடைத்தாள் திருத்தும் பணிகள்முழுவீச்சில்நடந்து வருகின்றன. இதையடுத்து எஸ்.எஸ்.எல்.சி. மாணவ-மாணவிகளுக்கான பொதுத்தேர்வு கடந்த 6-ந்தேதி தொடங்கியது.

இந்த தேர்வை 9 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் எழுதுகிறார்கள். இதுவரை தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் தேர்வு முடிந்துள்ள நிலையில், இன்று (வியாழக்கிழமை) சமூக அறிவியல் தேர்வுடன் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு நிறைவு பெறுகிறது. இதனைத்தொடர்ந்து விடைத்தாள் திருத்தும் பணிவருகிற25-ந்தேதிமுதல் அடுத்தமாதம்(மே)3-ந்தேதி வரை வேலைநாட்களில் நடைபெற உள்ளது. விடைத்தாள் திருத்தி மதிப்பெண்ணை ஆன்லைன் வாயிலாக வருகிற 25-ந்தேதி முதல் அடுத்த மாதம் 4-ந்தேதி வரை பதிவேற்றம் செய்யப்படும் வகையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அரசு தேர்வுத்துறைசம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது, மதிப்பீட்டுபணியைசெய்து முடிக்க தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையினை சரியாக கணக்கிட்டு பாடவாரியான, பயிற்று மொழி வாரியான ஆசிரியர்களைஉடனடியாக பணிவிடுவிப்பு செய்து முகாம் பணிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் தமிழ் வழியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழ்வழி விடைத்தாள்களையும், ஆங்கிலவழியில்கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆங்கில வழி விடைத்தாள்களையும் மட்டுமே மதிப்பீடு செய்ய வேண்டும். அதற்கேற்றவகையில் தமிழ், ஆங்கில வழிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை கணக்கிட்டு நியமனம் செய்திட வேண்டும்.

மதிப்பீட்டுபணியினை மேற்கொள்ளதங்களுடைய ஆளுகைக்குட்பட்ட அரசு பள்ளிகள், அரசு நிதியுதவிபெறும்பள்ளிகள், தனியார் பள்ளிகள் அனைத்திலிருந்தும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு பாடங்களை கற்பிக்கும் தகுதிவாய்ந்த பாட ஆசிரியர்களை தவறாமல் பணியில்இருந்துவிடுவித்து தேர்வாளர்களாக நியமனம்செய்யவேண்டும். எந்தவொரு பள்ளியில் இருந்தும் ஆசிரியர்கள் விடுபடாதுகண்காணித்தல் வேண்டும். தனியார் பள்ளிகள் தங்களுடைய ஆசிரியர்களை முகாம் பணிக்கு முழு எண்ணிக்கையில் அனுப்பி வைத்தால் மட்டுமே அப்பள்ளிக்கான தேர்வு முடிவு வெளியிடப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய பிரதேசத்தில் சரக்கு ரெயில்கள் மோதல்– என்ஜின் தீப்பிடித்தது



ஷாதூல் , ஏப்.20-

மத்திய பிரதேசத்தின் ஷாதூல் நகரில் சிங்பூர் ரெயில் நிலையம் அருகே 2 சரக்கு ரெயில்கள் நேருக்கு நேர் நேற்று மோதிக்கொண்டன. மோதிய வேகத்தில் ஒரு ரெயிலின் என்ஜின் மற்றொரு ரெயிலின் மீது ஏறியது. இந்த சம்பவத்தில் ஒரு எஞ்சின் தீப்பிடித்து எரிந்தது. ரெயில் விபத்தில் இரு ரெயில்களின் ஓட்டுநர்களும் காயமடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. 2 ரெயில்வே பணியாளர்கள் விபத்தில் சிக்கி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. இதுபற்றி தகவல் அறிந்து ரெயில்வே ஊழியர்கள் மீட்பு பணிக்காக சம்பவ பகுதிக்கு விரைந்து சென்றனர்.

இந்த விபத்து காரணமாக பிலாஸ்பூர் மற்றும் கத்னி வழியே செல்லும் ரெயில் போக்குவரத்து பாதிப்படைந்தது. விபத்து பற்றி தகவல் அறிந்த ரெயில்வே உயர் அதிகாரிகள் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியை முடுக்கி விட்டனர். விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் கணக்கிட்டு வருகின்றனர்.



காரைக்காலில் டாக்டர்அம்பேத்கர் கல்வி அகாடமியின் வேலை வாய்ப்பு மற்றும் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய முதல் நாள் பயிற்சி வகுப்பு தொடங்கியது.இதில் அனைத்து சமூகத்தினரும்பயிற்சி வகுப்பில் பங்கெடுக்க நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மாறன் மற்றும் சூர்யா அழைப்பு விடுத்துள்ளனர்

# தி டிடெய்லிங் மா:ஃபியா பிராஞ்சைஸி சூர்யா ஆட்டோ க:ஃபே ஷோரூம் திறப்பு விழா



சென்னை , ஏப்.20-

பிரியதர்ஷினி செல் யுனிவர்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான சூர்யா ஆட்டோ கஃபே, தி டிடெய்லிங் மாஃபியா ஷோரூம் சென்னை, கிழக்கு தாம்பரம் வேளச்சேரி மெயின் ரோட்டில் பிரம்மாண்டமாக தொடங்கப்பட்டுள்ளது. திறப்பு விழாவிற்கு தமிழ்நாடு வல்லம்பர் சங்கத் தலைவர் பி.எல். படிக்காசு தலைமை தாங்கினார்.

புதிய ஷோரூமை சிறு- குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.என்.ஜெ.குழும நிறுவனங்களின் தலைவர் எஸ்.என். ஜெயமுருகன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

திறப்பு விழாவில், சிறப்பு அழைப்பாளர்களாக அமைச்சர் எஸ். ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, காரம்பாக்கம் க.கணபதி பாராளுமன்றஉறுப்பினர் கலாநிதி வீராசாமி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், தாம்பரம் மாநகராட்சி கமிஷனர் அழகுமீனா, தாம்பரம் மாநகராட்சி கவுன்சிலர் ஷகிலா ஜான்சி ராணி, தி டிடெய்லிங் மாஃபியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் குணால் சேத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும், சூர்யா ஆட்டோ கஃபே நிறுவனத்தின் நிறுவனர்கள் எம். ஜி.சுரேஷ்குமார், எம். ஜி.எஸ்.சூர்யகுமார் ஆகியோர் வரவேற்றனர்.

# 15 ஆண்டுகளைக் கடந்த அரசுப் பேருந்துகள், பிற வாகனங்களை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்க வேண்டும்: அன்புமணி



சென்னை , ஏப்.20-

15 ஆண்டுகளைக் கடந்த பேருந்துகளும், பிற ஊர்திகளும் சுற்றுச்சூழலுக்கு சரி செய்ய முடியாத அளவுக்கு சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன. அது மட்டுமின்றி, அவை அவற்றில் பயணிப்பவர்களுக்கு மட்டுமின்றி, சாலையில் செல்வோருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை. இவற்றைக் கருத்தில் கொண்டு 15 ஆண்டுகளைக் கடந்த அரசுப்பேருந்துகளையும், பிற அரசுத் துறை ஊர்திகளையும் உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் 1500 அரசு போக்குவரத்துக்கழக பேருந்துகள் உள்பட 4000-க்கும் மேற்பட்ட அரசு ஊர்திகள் 15 ஆண்டுகளைக் கடந்தும் இயக்கப்பட்டு வருவதாகவும், அவற்றை மேலும் ஒன்றரை ஆண்டுகள் இயக்க அனுமதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் பாதுகாப்பிலும், சுற்றுச்சூழலிலும் அக்கறை இல்லாத இந்தக் கோரிக்கை கண்டிக்கத்தக்கது.

வணிகப் பயன்பாட்டுக்கான ஊர்திகளை 15 ஆண்டுகளிலும், தனிநபர் பயன்பாட்டுக்கான ஊர்திகளை 20 ஆண்டுகளிலும் செயல்பாட்டிலிருந்து நீக்கும் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. நடப்பாண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து விவாதிப்பதற்காக தில்லியில் மத்திய சாலைப்போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தலைமையில் நடைபெற்ற மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், ''தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள 20,926 பேருந்துகளில் 1500 பேருந்துகளும், 2500 பிற அரசுத்துறை ஊர்திகளும் 15 ஆண்டுகளைக் கடந்தவை. பேருந்துகளை கழிவு செய்தால் மக்களுக்கான போக்குவரத்துச் சேவை பாதிக்கப்படும் என்பதால், அவற்றை மேலும் ஒன்றரை ஆண்டுகள் இயக்க அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரியிருக்கிறார். இது ஏற்கத்தக்கதல்ல.

மக்களுக்கு போக்குவரத்து சேவை வழங்க வேண்டும் என்பதைக் காரணம் காட்டி, சுற்றுச்சூழலை சீரழிக்கும் செயல்களை அனுமதிக்க முடியாது. தமிழ்நாடு அரசு கொள்கையின்படி அரசுப் பேருந்துகள் 6 ஆண்டுகள் அல்லது 7 லட்சம் கிலோ மீட்டர் ஓடிய பிறகும், அரசு விரைவுப் பேருந்துகள் 3 ஆண்டுகள் அல்லது 7 லட்சம் கிலோ மீட்டர் ஓடிய பிறகும் மாற்றப்பட வேண்டும். ஆனால், கடந்த 2021-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசுப் பேருந்துகளின் பயன்பாட்டுக் காலம் 9 ஆண்டுகள் அல்லது 12 லட்சம் கிலோ மீட்டர் என்றும், அரசு விரைவுப் பேருந்துகளுக்கு 7 ஆண்டுகள் அல்லது 12 லட்சம் கிலோ மீட்டர் என்றும் நீட்டிக்கப்பட்டது. அரசுப் பேருந்துகளை அதிக அளவாக 7 ஆண்டுகள் இயக்குவதற்கே சூழலியலாளர்கள் இடையே கடும் எதிர்ப்பு எழுந்தது. இப்போது 15 ஆண்டுகளை கடந்து இயக்குவது எவ்வகையில் நியாயம்?

15 ஆண்டுகளைக் கடந்த பேருந்துகளும், பிற ஊர்திகளும் சுற்றுச்சூழலுக்கு சரி செய்ய முடியாத அளவுக்கு சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன. அது மட்டுமின்றி, அவை அவற்றில் பயணிப்பவர்களுக்கு மட்டுமின்றி, சாலையில் செல்வோருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை. இவற்றைக் கருத்தில் கொண்டு 15 ஆண்டுகளைக் கடந்த அரசுப்பேருந்துகளையும், பிற அரசுத் துறை ஊர்திகளையும் உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்க வேண்டும்; அவற்றுக்கு மாற்றாக புதிய ஊர்திகளை அரசு இயக்கவேண்டும்" எனக் கூறியிருக்கிறார்.

# விளம்பரம் தேடுவதற்காகவே அண்ணாமலை திமுக மீது குற்றம் சாட்டுகிறார் எம்.பி. விஜய் வசந்த் குற்றச்சாட்டு



சென்னை, ஏப். 20 –

சென்னை தண்டையார்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் வடசென்னை காங்கிரஸ் கமிட்டி மாவட்ட தலைவர் திரவியம் தலைமையில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மற்றும் எஸ் டி பி ஐ, மனிதநேய மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இதனை அடுத்து செய்தியார்களிடம் பேசிய திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், 20 ஆண்டுகளாகவே ஜாதி, மதம் என்ற அடிப்படையில் மக்களை தரம் பிரித்து பார்க்கின்ற அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற சூழ்நிலையில் அதை எதிர்க்கின்ற காரணமாகவும் மத நல்லிணக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். இன்று அரசியலில் இது போன்ற நிகழ்ச்சிகள் அதிகமாக நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து பேசிய விஜய் வசந்த், அண்ணாமலை ஒரு விளம்பரபிரியர். விளம்பரம் தேடுவதற்காகவே இது போன்ற குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார். பொறுத்திருந்து பார்ப்போம் என்று தெரிவித்தார்.

# கடலில் மூழ்கிய 2 மாணவர்களை காப்பாற்றிய வாலிபருக்கு பாராட்டு



காரைக்கால் , ஏப். 20 –

காரைக்கால் மேடு மீனவர் கிராமத்தைச் சேர்ந்த சத்தியசீலன் , பொறியியல் படித்த இவர் கடந்த மாதம் 9 தேதி அன்று காரைக்கால் கடற்கரையில் (சீகல்ஸ் பின்புறம்) மாலை நேரத்தில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த பொழுது கும்பகோணம் ஆடுதுறையை சேர்ந்த இரண்டு பள்ளி மாணவர்கள் கடலில் குளித்த போது ஆபத்தான நிலையில் தத்தளித்து மூழ்கிய வாலிபர்களை கடலில் குதித்து காப்பாற்றி கரை சேர்த்தார்.

இந்நிகழ்வை கேள்வியுற்ற முதுநிலை காவல் கண்காணிப்பாளர், சத்தியசீலனை நேரில் அழைத்து பாராட்டினார். இந்த செய்தியை அறிந்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சத்தியசீலனை நேரில் அழைத்து தமது பாராட்டை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் துனை மாவட்ட ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) பாஸ்கரன் மற்றும் ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி ஆகியோர் இருந்தனர். மேலும் ஆட்சியர் கூறுகளில் இவருடைய சாதனையை பாராட்டி இவருக்கு விருது அளிக்க பரிந்துரைக்கப்படும் என தெரிவித்தார்.

மேற்கண்ட சம்பவம் குறித்த நிகழ்ச்சி பொன்டைம்ஸ் டிவி, இணையதள தொலைக்காட்சியில் "அழகும் ஆபத்தும்" என்ற பெயரில் கடந்த மாதம் சிறப்பு தொகுப்பாக வெளிவந்தது, இதனை தொடர்ந்தே சத்தியசீலனுக்கு கலெக்டர் பாராட்டு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. சத்தியசீலனுடன் இணைந்து இரண்டு மாணர்வகளையும் மீட்கும் பணியில் ஈடுபட்ட காவலர் கேசவனையும் மாவட்ட நிர்வாகம் பாரட்டினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

# சீர்காழி கோவிலில் இருந்து சிலைகள், செப்பேடுகளை அப்புறப்படுத்தினால் போராட்டம்: பாஜக மாவட்ட தலைவர் அகோரம் அறிவிப்பு



சீர்காழி, ஏப். 20 –

சீர்காழி கோவிலில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள் மற்றும் தேவாரப் பதிகங்கள் பதிக்கப்பட்ட செப்பேடுகளை இங்கிருந்து அப்புறப்படுத்த நினைத்தால் பெரும் போராட்டம் நடத்தப்படும் என பாஜக மாவட்ட தலைவர் அகோரம் தெரிவித்துள்ளார்.

சீர்காழி சட்டநாதர் கோயிலில் 23 ஐம்பொன் சிலைகள், பூஜை பொருட்கள் மற்றும் 413 முழுமையான தேவார பதிகம்பதித்தசெப்பேடுகள், 83 சேதமடைந்த செப்பேடுகளும் கண்டெடுக்கப்பட்டு கோவில் வளாகத்திலேயே பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு ஆயுதம் ஏந்தியபோலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ஐம்பொன் சிலைகள், பூஜை பொருள்கள், செப்பேடுகள் உள்ளிட்டவைகளை நேற்று மாலை பாஜக மாவட்ட தலைவர் அகோரம் கட்சியினருடன் நேரில் வந்து பார்வையிட்டனர். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், சீர்காழி ஆன்மீக பூமியாகும். இந்த பூமியில் திருஞானசம்பந்தர் மூன்று வயதில் பார்வதி தேவி வழங்கிய ஞானப்பாலை உண்டு முதல் தேவாரப் பதிகத்தை பாடிய வரலாறு உண்டு. இந்த கோவிலில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளை இந்த கோவிலிலேயே பாதுகாப்பாகவைக்கப்பட வேண்டும். மாறாக அரசு கோவிலிலிருந்து சிலைகளை அப்புறப்படுத்த நினைத்தால் பாஜக சார்பில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும். இச்சிலைகள் மற்றும் செப்பேடுகளை விரைவில் மாநிலத் தலைவர் அண்ணாமலை நேரில் வந்து பார்வையிட உள்ளார்.

கடந்த காலங்களில் அக்பர், கஜினி உள்ளிட்டோர் படை எடுப்புகளால் இந்த ஐம்பொன் சிலைகளை கோவில் வளாகத்திற்குள் பாதுகாப்பு கருதி புதைத்து வைத்திருக்கலாம். தருமபுரம் ஆதீனம் பழமையான ஆதீனம் எனவே அரசு கோவில் வளாகத்திற்குள்ளேயே சிலைகளை பாதுகாப்பாக வைத்து ஆய்வு பணியை மேற்கொள்ளலாம். இல்லையென்றால் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றார்.

## விடியலை நோக்கி அறக்கட்டளை

# சென்னை எம்.என் கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் பரிசோதனை முகாம்



செங்கல்பட்டு, ஏப். 20 –

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த கருங்குழியில் செங்கல்பட்டு மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் அனுமதியுடன் விடியலை நோக்கி அறக்கட்டளை மற்றும் சென்னை எம்.என் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் விடியலை நோக்கி அறக்கட்டளையின் நிறுவனத்தலைவர் "சேவா ரத்னா" டாக்டர் விடியல் சீ.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இந்த கண் பரிசோதனை முகாமில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த இலவச கண் சிகிச்சை முகாமில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பக்கிரிசாமி, அறக்கட்டளையின் இணை செயலாளர் கோபிநாத், செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலாஜி, அறக்கட்டளையின் பொறுப்பாளர்கள் கார்த்திகேயன், அஜித், உதயகுமார், யுவராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, "இயற்கை சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு சங்கம் தொண்டு நிறுவனமும் இணைந்து மீனவர்களுக்கான கடல் ஆமை பாதுகாப்பு மற்றும் சதுப்பு நில காடுகள்குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் காரைக்கால் மாவட்டம், காளிகுப்பத்தில் அமைந்துள்ள மீன்வளப் பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. தொண்டு நிறுவனத்தின் திட்ட மேலாளர் அபிசேக், கடல் ஆமை பாதுகாப்பு மற்றும் சதுப்பு நில காடுகளின் அவசியம் மற்றும் அவற்றின் பாதுகாப்புகுறித்த விழிப்புணர்வு பற்றி எடுத்துரைத்தார். மேலும் அவைகளுக்கு ஏற்படும் அழிவுகளுக்கான காரணங்கள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவத்தை பற்றியும் விழிப்புணர்வு வழங்கினார். "இயற்கை சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு சங்கம் தொண்டு நிறுவனத்தின் மகாதேவன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். மேலும் இந் நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட மீனவர்கள் 40 நபர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை ஆய்வாளர் பாலாஜி வரவேற்புரை வழங்கினார். ஆய்வாளர் பாலசந்தர் நன்றியுரை வழங்கினார்.



ராகுல் காந்தி நாடளுமன்ற உறுப்பினர் பதிவை தகுதி நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து சென்னை திருவொற்றியூரில் காங்கிரசார் கண்களில் கருப்பு கொடி கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர் வடசென்னை கிழக்கு மாவட்டம் அமைப்புசாரா தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைவர் கலையரசன் தலைமையில் வட சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் எம்.எஸ். திரவியம் முன்னிலையில் சென்னை திருவொற்றியூரில் தபால் நிலையம் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் கண்களில் கருப்பு கொடி கட்டி மத்திய அரசு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் அமைச்சரா தொழிலாளர்கள் காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் வீ. மகேஷ்வரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்




திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மெய்யூர் கிராமத்தில் வசித்து வருபவர் 4-வது வார்டு திமுக ஒன்றிய குழு உறுப்பினர் தேன்மொழி. இவர் கொடுத்த புகாரின் பேரில் பெரியபாளையம் காவல்துறையினர் எ.வேல்முருகன், பி.மதன்குமார் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர். இந்நிலையில், தேன்மொழி கொடுத்த பொய் புகார் மீது பெரியபாளையம் காவல்துறையினர் பொய்யாக வழக்கு பதிவு செய்ததாக கூறி ஊத்துக்கோட்டை வழக்கறிஞர் சங்கம் சார்பில் காலவரையற்ற நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும்,21-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளனர்.

# கர்நாடகாவில் அதிமுக தனித்துப் போட்டி அதிர்ச்சியில் பாஜக

பெங்களூரு , ஏப். 20 –

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் அதிமுக தனித்துப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற மே 10-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், பாஜக கூட்டணியில் அதிமுக போட்டியிடுவது குறித்து ஆலோசனை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், புலிகேசி நகர் தனித் தொகுதியில் பாஜக வேட்பாளர் முரளியை எதிர்த்து அதிமுக சார்பில் அன்பரசன் போட்டியிடவுள்ளதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

சமீபகாலமாக பாஜக - அதிமுக கூட்டணியில் ஏற்பட்ட சலசலப்பு சற்று ஓய்ந்த நிலையில், கர்நாடகவில் பாஜகவுக்கு எதிராக வேட்பாளரை அதிமுக களமிறக்கியுள்ளது.

# மயிலாடுதுறையில் பல்வேறு இடங்களில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் ஆய்வு





மயிலாடுதுறை, ஏப். 20 –

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்திற்குட்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, தொடக்கப்பள்ளி, அங்கன்வாடி மையம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனை, திரையரங்கு உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

கீழ நாஞ்சில் நாடு கடை எண்: 1 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரத்தினையும், தம்பிக்கு நல்லான் பட்டினம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் காலை இணை உணவு (கொழுக்கட்டை) குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதனையும், தம்பிக்கு நல்லான் பட்டினம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் சுகாதார துறையின் சார்பில் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்று வருவதையும், தம்பிக்கு நல்லான் பட்டினம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் குழந்தைகளுக்கு பாடம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை கற்பிக்கும் முறையினையும் மவட்ட ஆட்சியர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மயிலாடுதுறையில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு சென்று ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஓய்வறை, நீரினால் வாகனங்கள் கழுவும் இடம், கழிப்பறை போன்ற இடங்களில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், மயிலாடுதுறையில் உள்ள ரத்னா மற்றும் பியர்லெஸ் திரையரங்குகளில் தமிழக அரசின் சாதனை விளக்க செய்தி மலர் ஒளிபரப்பு செய்யப்படுகிறதா, கழிப்பறை, "சி' படிவம், தீயணைப்பான் கருவி போன்றவைகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என ஆய்வு மேற்கொண்டேன்.

ஆய்வின் போது மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, மயிலாடுதுறை வட்டாட்சியர் மகேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி கோவிலில் அமாவாசை பஞ்சலோக தீப ஆராதனை நிகழ்ச்சி





திருவள்ளூர், ஏப். 20 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கொசவன்பேட்டை கிராமம், பிள்ளையார் கோவில் தெருவில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி தேவாங்க டெம்பிள் டிரஸ்ட் சார்பாக ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி கோவில் கட்டுமான திருப்பணி கடந்த பிப்ரவரி மாதம் 13-ம் தேதி துவக்கி நடைபெற்று வருகிறது.

இங்கு நேற்று மதியம் அமாவாசை பஞ்சலோக தீப ஆராதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இதை முன்னிட்டு கோ-பூஜை, 108 பெண்கள் கலந்துகொண்ட விளக்கு பூஜை, லலிதா சகஸ்ரநாம பாராயண, வஸ்திரதான நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது. புரோகிதர்கள் என்.விநாயகம், என்.பாலாஜி, ஜி.கோபால் கோவில் அர்ச்சகர்கள் ஆர்.என். சி.முரளி, கே.ஹேமபூஷணம் ஆகியோர் பூஜைகளை சிறப்பாக செய்தனர்.

இதன் பின்னர் மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர், அனைவருக்கும் பிரசாதம்வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாபா.கருணாமூர்த்தி தலைமையில், வி.ஈஸ்வரய்யா மற்றும் டிரஸ்ட் நிர்வாகிகள், உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



சென்னை துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அறநிலை துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு உத்தரவின் பேரில் ,தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் 70 தாவது பிறந்தநாளை யொட்டி சென்னை பிராட்வே ஆசிர்வாதபுரம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி கால்பந்து மைதானத்தில் ,ஐவர் பங்கேற்ற கால்பந்து போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் யாரும் கோல் அடிக்காததால் டைப்ரேக்கர் முறையில் வெற்றி தோல்வி தீர்மானிக்க பட்டது. இதில் ஹரி செலக்ட் அணி 4 – 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர். அந்த அணி சார்பில் கோல் அடித்த வீரர்கள் தனுஷ்,இர்பான்,விஜய்,கிஷோர், அந்த அணியின் கோல் கீப்பர் பாலாஜி எதிர் அணியின் ஒரு கோலை தடுத்து அணியை வெற்றி பெற செய்தார் ,இறுதியில் 4 – 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை வென்றனர். முதல் பரிசு வெற்றி பெற்ற அணிக்கு பிரிட்ஜ் ஒன்று பரிசாகவும் அனைத்து வீரர்களுக்கும் ஐந்து லிட்டர் குக்கர் பரிசாகவும் கிட் பேக் ஒன்றும் வழங்கப்பட்டது. இந்த விழாவில் திமுக கட்சி பகுதி செயலாளர், கவுன்சிலர் மற்றும் கட்சி முக்கிய நிர்வாகிகள், முத்தியால் பேட்டை காவல்துறை ஆய்வாளர், மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# சென்னை கொருக்குப்பேட்டையில் முதல்வர் பிறந்த நாள் விழா, நலதிட்ட உதவிகள் வழங்கல்





சென்னை.ஏப்,20

சென்னை வடக்கு மாவட்டம் ஆர் கே நகர் மேற்கு பகுதி 47 வது வட்டத்தில் தமிழ்நாடு முதல்வரின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் வாழ்த்து அரங்கம், நலத்திட்ட உதவிகள் மற்றும் நினைவு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது .இந்த விழாவிற்கு ஆர் சீனிவாசன் தலைமை தாங்கினார், ஆர் ராஜன் முன்னிலை வகித்தார்.

மேலும் இந்த விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கி நினைவு பரிசு வழங்கியவர்கள் தா.இளைய அருணா ஆர். கே.நகர் எம்.எல்.ஏ ஜே.ஜே. எபினேசர், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், கவுன்சிலர் இ.மணிமேகலை, ஜி.ஏழுமலை ஆகியோர் நலதிட்ட உதவிகள் வழங்கினார்கள்.

மேலும் வாழ்த்துத்தரங்கதில் நாகம்மை கருப்பையா பேராசிரியர் சுந்தரவல்லி பா.மணியாம்மை டாக்டர் வை.கலைவாணன் கு.நெப்போலியன் கவிஞர் எம்.சுல்தான் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் மாஸ் டி.வெங்கடேசன் மு.கோவிந்தராஜ் எம். லோகநாதன் டி.திராவிட செல்வி பி.சீனிவாசன் ,சுந்தர் ,சசிகுமார் எஸ்.சொக்கலிங்கம் மீஞ்சூர் முகுந்தன் ஜி. ராஜா இ.ரவிக்குமார் கே. ஜானகிராமன் வட்ட நிர்வாகிகள் முகமது அலி முருகன் ஜி.என்.ராகவேந்திரா பி.ராம்குமார்,வீரதிலகம் எம். தியாகு ஜெ.கன்னியம்மாள் ஸ்டீல் ஏ மோகன் எம். குப்புசாமி பி எஸ்.வீரா ஏ.அமுலு ஆர்.விக்னேஷ் இ.மதியழகன் மற்றும் எஸ்.பாஸ்கர் எஸ்.எஸ். மணி ஏ.எஸ்.கோபால் என்.சுப்பராயன் எம். முருகன் பி.மாறன் பி.ஜே. சாமுவேல் ஜி.நாகராஜன் என்.கோதண்டராமன் ஜி எச் ராஜீ ஜோக்கர். கணேசன், சாகுல் அமீத் சவுர் அலி என்.பாஸ்கர் மஸ்தான் சி.எச்.துரைபாபு ஆர்.ராம்ராஜ் இ.கே வடிவேலன் பி.கருப்பசாமி அல்லாபக்கஷ் பி.அன்புமணி ஸ்டீல். குணா எஸ்எ.சுலோச்சனா ஆர். கலையரசி சென்சம்மா சரஸ்வதி என்.பி.அஜித்க.கவியரசன் பி.தீபக் எம்.மதன் குமார் எஸ்.பூர்ணா ஜேசி பீட்டர் டி.அஜித் குமார் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் பி.வெங்கடேசன் கட்டம். வெங்கட்டாய்யா என். அருண்குமார் ஆர். நாகராஜ் நன்றியுரை க.சுந்தர்ராஜன் எஸ். தமிழரசு எம்.பிரபு மற்றும் பலர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

# பல்வீர் சிங் மீதான வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக டிஜிபி உத்தரவு



**சென்னை , ஏப். 20-**

**திருநெல்வேலியில் குற்ற வழக்குகளில் சிக்கிய குற்றம் சாட்டப்பட்டவர்களின் பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.**

திருநெல்வேலியில் குற்ற வழக்குகளில் சிக்கிய குற்றம்சாட்டப் பட்டவர்களின் பற்களை அம்பாசமுத்திரம் ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் பிடுங்கியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முதலில் விசாரணை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து பல்வீர் சிங் மார்ச் 29-ம் தேதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அம்பாசமுத்திரம் காவல் உட்கோட்டத்தில் பணியாற்றி வந்த காவலர்கள் ராஜ்குமார், போகபூமன், சந்திரசேகரன், ராஜகுமாரி, ஏ.பெருமாள், என்.சக்தி நடராஜன், எம்.சந்தானகுமார், வி.மணிகண்டன் ஆகியோர் ஆயுதப்படைக்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குற்றம்சாட்டப் பட்டவர்களின் பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த உயர்மட்ட அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் அமுதாவை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது. மேலும், ஒரு மாத காலத்திற்குள் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன்படி, மூத்த ஐஏஎஸ் அதிகாரி அமுதா 2-ம் கட்ட விசாரணை நடத்தி வருகிறார்.

இதனிடையே, ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பல்வீர் சிங் மீது திருநெல்வேலி மாவட்ட குற்றப் பிரிவு காவல் துறை 324, 326, 506-1 ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஐஏஎஸ் அதிகாரி அமுதா தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையில் 'வழக்கு விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும்' என்று பரிந்துரை செய்துள்ளார். இதன்படி பல்வீர் சிங் வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.



**தென்காசி மாவட்டம்-தமிழ்நாடு வலுதூக்கும் சங்கம் நடத்தவிருக்கும் ஜூனியர் சப் ஜூனியர் தேசிய வலுதூக்கும் போட்டிக்கான இலட்சினையை சென்னையில் தமிழ்நாடு வலுதூக்கும் சங்கத் தலைவர் திமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்.**



**திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், வேங்கூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ18.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தின் கட்டுமான பணிகளை மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.**

# புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் சமூக நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி



புதுக்கோட்டை , ஏப். 20-

புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் சமூக நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி ஏஎன்எஸ் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில், தமிழ்ச்செம்மல் கவிஞர் தங்கம்மூர்த்தி, புதுகை ஹிக்மத்துல் பாலிகா அரபிகல்லூரி முதல்வர் எஸ். அப்துல்ஜப்பார் பாகவி, தசுலுச தேவலாய சபை குரு மறைதிரு ஐ.பி. யோபு ஞானையா ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர்.

ரோட்டரி மண்டல செயலாளர்கள் வீ.ஆர். வெங்கடாசலம், ஜி.எஸ். எம். சிவாஜி, கருப்பையா, மாவட்டதுணை ஆளுநர் கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வை புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தலைவர் எம்.கோபிநாத், செயலர் எஸ்பி. கருப்பையா, திட்ட இயக்குநர்கள் கே. பஷீர்முகமது, எஸ். அகமதுமன்சூர், எம்எம். பக்ருதீன்அலி,டிஎஸ். அக்பர் அலி, ஏ. காஜாமைதீன்,கேகே. முகமதுதாரிக், ஆர். முகமது கனி ஆகியோர் செய்திருந்தனர்.இது குறித்து கவிஞர் தங்கம் மூர்த்தி கூறியதாவது:

சமூக நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டில் வாழும் சமூகங்களுக்கிடையில் இன, மத, மொழி, குடும்ப உறவுகள் என்பவற்றில் உண்டாகும் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு என்பவற்றை குறிக்கும். இது பல்வேறு அமைப்புக்களின் அடிப்படையில் வேறுபடுகின்ற இருசாராருக்கு மத்தியில் ஏற்படுகின்ற ஒருமைப்பாட்டினை வலியுறுத்துகிறது. இன்பமும் துன்பமும் இரண்டில் எது சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருந்தாலும் இந்து முஸ்லிம் கிறிஸ்துவ என்று மதத்தை பிரித்துப் பார்க்காமல் மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு செயலை செய்வது சமூக நல்லிணக்கம் ஆகும்சமூக நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டுக்குள் வாழும் பல பண்பாட்டுச் சமூகங்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, சகவாழ்வு ஆகியவற்றை நிலைநிறுத்தவதை அடிப்படையாகக் கொண்ட பண்பாகும். இதை வலியுறுத்துவதிலும் செயலாக்கத்திலும் தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருவது சிறப்புக்குரியது என்றார்.

# தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கை இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

சென்னை , ஏப். 20-

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் ஏழை குழந்தைகளுக்கு தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கை பெற இன்று முதல் இணையவழியில் விண்ணப்பிக்கலாம் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. இதுகுறித்து தனியார் பள்ளிகள் இயக்குநர் நாகராஜமுருகன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் படி தமிழகத்தில் சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளில் 25 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ், ஏழை குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் இலவச சேர்க்கை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2023-2024-ம் கல்வியாண்டில் தங்களது பிள்ளைகளுக்கு இலவச சேர்க்கை பெற விரும்பும் பெற்றோர் இன்று ஏப்ரல் 20ம் தேதி முதல் மே 18-ந்தேதி வரை rte.tnschools.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

குழந்தைகளை நுழைவு நிலை வகுப்பில், அதாவது எல்.கே.ஜி. முதல் நடைபெற்று வரும் பள்ளிகளில் எல். கே.ஜி. வகுப்பிலும், ஒன்றாம் வகுப்பு முதல் செயல்பட்டு வரும் பள்ளிகளில் 1-ம் வகுப்பிலும் சேர்ப்பதற்கு விண்ணப்பிக்கலாம். மே 18-ந்தேதி வரை பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியான விண்ணப்பங்கள் குறித்த விவரங்களும், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் இணையதளத்திலும், சம்பந்தப்பட்ட பள்ளியின் தகவல் பலகையிலும் மே 21-ந் தேதி மாலை 5 மணிக்கு வெளியிடப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் எல்.கே.ஜி. வகுப்புக்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 2019 ஆகஸ்டு 1-ந் தேதியில் இருந்து 2020-ம் ஆண்டு ஜூலை 31-ந் தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும். 1-ம் வகுப்புக்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 2017 ஆகஸ்டு 1-ந்தேதியில் இருந்து 2018-ம் ஆண்டு ஜூலை 31-ந்தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்.

தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் பெற்றோர், குழந்தையின் பிறப்புச் சான்றிதழ், வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் விண்ணப்பிக்க சாதி சான்றிதழ், வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்புப் பிரிவினரின் கீழ் விண்ணப்பிக்க உரிய சான்றிதழ், நலிவடைந்தோர் பிரிவின் கீழ் விண்ணப்பிக்க பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கும் கீழ் உள்ள வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்று ஆகியவற்றை உரிய அலுவலரிடம் இருந்து பெற்று, இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். பெற்றோர்கள், விண்ணப்பதாரர்கள் இணையவழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், வட்டார கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மைய அலுவலகங்களிலும் கட்டணமின்றி விண்ணப்பிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிட கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட பள்ளியில் மே 23-ம் தேதி குலுக்கல் நடத்தப்பட்டு சேர்க்கைக்கான குழந்தைகள் தேர்வு செய்யப்படுவர். தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் பெயர் பட்டியல் விண்ணப்ப எண்ணுடன் மே 24-ந் தேதி இணைய தளத்திலும், சம்பந்தப்பட்ட பள்ளியின் தகவல் பலகையிலும் வெளியிடப்படும். சேர்க்கைக்கு தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளை மே 29-ந்தேதிக்குள் பள்ளியில் சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



மயிலாடுதுறை, ஏப். 20 -

மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வாரம் தோறும் புதன்கிழமைகளில் பொது மக்களை நேரடியாக காவல்துறை கண்காணிப்பாளர் சந்தித்து குறைகளை கேட்டு மனு அளிக்கும் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் நேற்று திருச்சி மண்டல ஐஜி கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது.

காவல் துறை கண்காணிப்பாளர் நேரடியாக பொதுமக்களிடம் மனுக்களை பெறுவதால் உள்ளூர் காவல் நிலையங்களில் தீர்க்க முடியாத பிரச்சினைகளை கொண்ட பொதுமக்கள் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்திருந்து புதன்கிழமை மனு அளித்து தீர்வு பெற்று சென்றனர். திருவாரூர் தஞ்சை சரக டி.ஐ.ஜி ஜெயச்சந்திரன் மற்றும் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# நீச்சல் போட்டியில் சாதனை நடிகர் மாதவன் மகனை வாழ்த்திய விஜயகாந்த்



சென்னை , ஏப். 20-

இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'அலைபாயுதே' திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் நடிகர் மாதவன். இதைத்தொடர்ந்து 'மின்னலே', 'டும் டும் டும்', போன்ற பல படங்கள் நடித்ததன் மூலம் தனக்கான இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

இவர் தமிழ் மட்டுமல்லாமல் இந்தி படங்களிலும் நடித்து புகழ் பெற்றார். வேதாந்த் சமீபத்தில் 'ராக்கெட்ரி - நம்பி விளைவு' திரைப்படத்தை இயக்கி நடித்திருந்தார். பெரும் எதிர்பார்ப்பில் வெளியான இப்படம் விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. நடிகர் மாதவனின் தன் மகன் வேதாந்த் செய்யும் சாதனைகளை தனது சமூக வலைதளத்தில் அடிக்கடி பதிவிட்டு வருகிறார் சமீபத்தில் வேதாந்த் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற Malaysia Invitational Age Group Swimming Championship போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்று 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளதாக மாதவன் தனது இணையப் பக்கத்தில் புகைப்படங்களை பகிர்ந்து தெரிவித்திருந்தார். இவருக்கு திரைப்பிரபலங்கள் ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், வேதாந்திற்கு வாழ்த்து தெரிவித்து நடிகர் விஜயகாந்த் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "மலேசியாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் பங்கேற்ற நடிகர் மாதவனின் , 17 வயது மகன் வேதாந்த் 50, 100, 200, 400 & 1500 மீட்டர் ஆகிய பிரிவுகளில் பங்கேற்று வெற்றி பெற்று, 5 தங்கங்களை வென்றுள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும் ஒலிம்பிக் உள்ளிட்ட உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று பல பதக்கங்கள் வென்று தமிழகத்திற்கும் இந்திய நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று எனது பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் மனப்பூர்வமாக தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# தென்காசி மாவட்டத்தில் முக கவசம் கட்டாயம் மாவட்ட ஆட்சியர் தகவல்

தென்காசி ஏப். 20

தமிழகத்தில் மார்ச் 2023 முதல் வாரத்தில் இரண்டு இலக்கு நோயாளிகளின் எண்ணிக்கை மார்ச் கடைசியில் மூன்று இலக்க நோயாளிகளாக எண்ணிக்கை உயர்ந்துள்ளதால் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வுத்துறை செயலகம் மற்றும் அமைச்சரவை அறிவுறுத்தலின்படி தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்படுகிறார்கள்.



மேலும் மருத்துவ சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் நோயாளிகளுடன் இருப்பவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மேலும் முகக்கவசம் அணியாத நபர்கள் மீது தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1934 ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# தென்காசியில் சிவந்தி ஆதித்தன் 10வது ஆண்டு நினைவு தினம்



தென்காசி, ஏப். 20-

தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு டாக்டர் சிவந்தி ஆதித்தனின் பத்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் பொதுச் செயலாளர் ஆனந்த் காசிராஜன் பொருளாளர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் அலங்கரிக்கப்பட்ட அவருடைய திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் வணிகர்கள் கல்வியாளர்கள் துணைச் செயலாளர் ஜான் டேவிட், ஒன்றிய தலைவர் ராஜ் நயினார், தெற்கு மாவட்ட துணை செயலாளர் மோகன் குமார், சரவணன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சந்திரசேகர், ஒன்றிய தலைவர் செங்கோட்டை பாவூர்சத்திரம், காய்கறி மார்க்கெட் நிர்வாகிகள் கண்ணன், நரசிம்ம சிங்கம், ராஜேந்திரன், காந்தி, தென்காசி வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் பரமசிவன், சந்திரமதி, சுடலைமுத்து, தென்காசி தினசரி காய்கறி மார்க்கெட் நிர்வாகிகள் பாண்டியன், நாராயணன், சுடலை கனி ,சேர்ந்தமரம் மஜ்ரா ஊராட்சி துணைத் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு சிவந்தி ஆதித்தனின் பெயர் சூட்ட வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

# பொதுமக்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான குளிர்பானங்கள் வழங்குதலை உறுதி செய்திட வேண்டும் அரியலூர் கலெக்டர்



அரியலூர் , ஏப். 20-

பொதுமக்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான குளிர்பானங்கள், பழச்சாறுகள் வழங்குதலை உறுதி செய்திட வேண்டும் என அரியலூர் மாவட்ட கலெக்டர் ரமண சரஸ்வதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கோடை காலம் துவங்கியுள்ளதால், பொது மக்கள் வெயிலின் தாக்கத்தை குறைக்க பல வழிகளில் குளிர்பானங்கள் மற்றும் பழச்சாறுகளை அருந்தும் சூழல் காணப்படுகிறது. அதனால் மாவட்டம் முழுவதும் சாலையோர மற்றும் நிரந்தர குளிர்பான கடைகளில் பரவலாக பொது மக்களின் நுகர்வு அதிகரித்துள்ள இந்த கோடை காலத்தில், வணிகர்கள் பொது மக்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான குளிர்பானங்கள் மற்றும் பழச்சாறுகள் வழங்குதலை உறுதி செய்திட வேண்டும்.

சாலையோர உணவு வணிகர்கள் உட்பட அனைத்து வணிகர்களும் உணவு பாதுகாப்பு தரச்சட்டத்தின்படி உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவு சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். குளிர்பானங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும் அனைத்து மூலப்பொருட்களும் உணவு பாதுகாப்பு உரிமம் பெற்ற உணவுபொருட்களாக இருக்க வேண்டும். மிக முக்கியமாக பயன்படுத்தப்படும் குடிநீர் தரச்சான்று மற்றும் உணவு பாதுகாப்பு உரிமம் பெற்ற குடிநீராக இருக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலாக செயற்கை வண்ணங்களை சேர்த்தல் கூடாது. நுகர்வோருக்கு வழங்கும் முன்னர் அதன் காலாவதி தேதியை உறுதிப்படுத்திட வேண்டும்.

பழச்சாறு தயாரித்து விற்பனை செய்யும் உணவு வணிகர்கள் அழுகிய பழங்களையும் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்களையும் பயன்படுத்த கூடாது. மிக்ஸி போன்ற உபகரணங்களை வாய்பகுதி சீலிட்டு மூடியிருத்தல் மற்றும் காலாவதி நாள் போன்றவற்றை உறுதி செய்திட வேண்டும். சூரிய ஒளி படும் இடத்தில் குடிநீர் கேன்கள், பாட்டில்களை இருப்பு வைக்க கூடாது.

இத்தகைய வழிகாட்டுதல்களை கடைபிடித்து பொதுமக்களுக்கு தரமான பாதுகாப்பான தரமான குளிர்பானங்களை வழங்கிட வேண்டும் என்று உணவு வணிகர்கள் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

பொது மக்கள் உணவு பாதுகாப்பு தொடர்பான புகார்களை 9444042322 என்ற கைப்பேசி எண்ணில் புகார் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# வேங்கைவயல் விவகாரம் தொடர்பான கேள்விக்கு செய்தியாளரிடம் திருமாவளவன் காட்டம்



சென்னை , ஏப். 20-

வேங்கைவயல் பிரச்சினையில் யாரையும் காப்பாற்றுகிற முயற்சியில் அரசு ஈடுபடவில்லை என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் வேங்கைவயல் சம்பவத்தில் தமிழக அரசின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "வேங்கைவயல் விவகாரம் குறித்து, கண்காணிப்புக் குழுவிடம் பேசியிருக்கிறோம். ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறோம். தற்போது சட்டமன்றத்தில் பேசியிருக்கிறோம். அரசு, அந்த விவகாரத்தில் நிலவும் உண்மைகளை கண்டறிவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குற்றவாளிகளை கைது செய்வதற்கான உறுதியை அளித்திருக்கிறார்கள். எனவே அரசின் நடவடிக்கையின் மீது நம்பிக்கையோடு இருக்கிறோம்" என்றார்.

அப்போது சம்பவம் நடந்து இத்தனை நாட்கள் ஆகிறதே? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, "நாட்கள் என்பது ஒரு பிரச்சினை இல்லை. இத்தனை நாட்களுக்குள் கண்டுபிடிக்க வேண்டும் என்றால், ராமஜெயம் கொலை வழக்கில், இத்தனை ஆண்டுகளாகியும் இன்னும் உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக நாம் உள்நோக்கம் கற்பிக்க முடியுமா?

சில வழக்குகளில் நிர்வாக சிக்கல் இருக்கலாம். விசாரணையில் இன்னும் உறுதி செய்யப்படாத தகவல்கள் இருக்கலாம். தமிழக அரசு தலித் மக்களுக்கு எதிராக இல்லை. வேங்கைவயல் பிரச்சினையில் யாரையும் காப்பாற்றுகிற முயற்சியில் அரசு ஈடுபடவில்லை" என்றார்.

அப்போது குறுக்கிட்ட செய்தியாளர் ஒருவர், ஒரு சின்ன கிராமத்தில் நடந்த சம்பவம் குறித்து, நீண்ட நாட்களாக விசாரணை நடப்பதாக சொல்லப்படுகிறது என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அவர், "சின்ன கிராமம், பெரிய கிராமம் என்பதல்ல பிரச்சினை. அரசு எதிராக இல்லை. அரசுக்கு தலித் மக்களுக்கு எதிராக செயல்படவேண்டிய தேவை இல்லை. உண்மை குற்றவாளியை கண்டுபிடிக்கட்டும். அதில் என்ன அவசரம், காலக்கெடு ஏதாவது இருக்கிறதா? புலனாய்வில் அதிகாரிகளுக்கு இருக்கும் தேக்கத்திற்கான காரணம் இதுவரை நமக்கு தெரியவில்லை" என்றார்.

அப்போது அந்த செய்தியாளர், நீங்களும் தற்போது திமுககாரர் போல பேசுகிறீர்களே? என்றார். அதற்கு பதிலளித்த திருமாவளவன், "இந்த மாதிரி பேசுகிற வேலை வைத்துக்கொள்ள வேண்டாம். இதுபோல பேசுவதை எல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக்கொள்ளுங்கள். இதெல்லாம் நாகரிகம் இல்லாத பேச்சு. உங்களுக்கும் ஒரு நாகரிகம் வேண்டும். நாகரிகம் தவறி பேசாதீர்கள்.

உண்மைகளின் அடிப்படையில் கேள்வி கேளுங்கள். உங்களுடைய கருத்தை திணிக்காதீர்கள். திமுகவை எதிர்த்து எங்களைப் போல போராட்டம் யாரும் நடத்தவில்லை. தலித் மக்கள் பிரச்சினைகளுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் 10 போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். ஏப்ரல் 20ம் தேதி நாளை கூட கிருஷ்ணகிரியில் போராட்டம் நடத்தவுள்ளோம். திமுக கூட்டணியில் இருப்பதால், இதுபோன்று அநாகரிகமாக பேசக்கூடாது" என்றார். இதனால் அங்கு சிறிதுநேரம் சலசலப்பு ஏற்பட்டது. இந்தச் சந்திப்பின்போது விசிக சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 போலி டாக்டர்கள் சிறையில் அடைப்பு

# உச்ச நீதிமன்றம் உத்தரவு எதிரொலி நொச்சிக்குப்பம் மீனவர்கள் போராட்டம் வாபஸ்





# தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கை இன்று முதல் விண்ணப்பிக்கலாம்


சென்னை / புதுக்கோட்டை | 20.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

20.04.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**இட்லர்**, ஆத்திரிய-செருமானிய போர்வீரர், அரசியல்வாதி, செருமனியின் அரசுத்தலைவர் (பி.1889) (இ.1945)



**சிட்டி பெ. கோ. சுந்தரராஜன்**, தமிழக எழுத்தாளர் (பி.1910) (இ.2006)



**சாரணபாசுகரன்**, தமிழகக் கவிஞர், இதழாளர் (பி.1923) (இ.1986)



**நா. சந்திரபாபு நாயுடு**, ஆந்திராவின் 13வது முதலமைச்சர் (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

**திருக்கண்ணபுரம் விஜயராகவன்**, தமிழகக் கணிதவியலாளர் (பி.1902) (இ.1955)



**ராஜ ஸ்ரீகாந்தன்**, ஈழத்து எழுத்தாளர் (பி.1948) (இ.2004)



**ர. சு. நல்லபெருமாள்**, தமிழக எழுத்தாளர் (இ.2011)



## ஐநா சீன மொழி நாள் (ஐநா)